நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : உயர்நிலை

## Level : Advanced

***June 2012***

வினாக்கள் : 60

வழங்கப்படும் நேரம் : 70 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

**வினாக்கள்: 1-10 பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

## புத்தக வெளியீட்டில் சுஜாதா

இம்மாதிரிப் புத்தக வெளியீட்டு விழாக்கள் எல்லாம் ஒருவிதமான சுயஉலா தான் இந்த மேடையிலும் சபையிலும் உள்ளவர்கள் அத்தனை பேரும் என் நண்பர்கள். ஏதோ ஒரு விதத்தில் என் எழுத்தாற்றலுக்கு வழியமைத்தவர்கள். இவர்களுடன் ஒரு மாலையை செலவழிப்பதில் எனக்கு மகிழ்ச்சியே.

எழுத்தாளர்கள் பல வகை. எழுத்தால் சமூகத்தை மாற்ற வேண்டும் என்கிறவர்கள், புரட்சி வரவேண்டும் புறப்படு தோழா, என்கிறவர்கள், எழுத்து ஒரு தவம். அதற்கு பிறந்து வர வேண்டும் என்பவர்கள் காசு கொடுக்காமல் எழுதக் கூடாது என்பவர்கள் காசுக்காக எழுதக்கூடாது என்பவர்கள் என்னை எந்த வகையில் சேர்ப்பது என்று இன்னும் தமிழ்கூறும் நல்லுலகம் தீர்மானிக்கவில்லை. சிலர் கருத்துப் படி பிரபலமாவது மகா பாவம் பிரபலமானவன் நல்ல எழுத்தாளனில்லை.

ஒவ்வொரு தலைமுறையிலும் எனக்குப் புது வாசகர்கள் கிடைப்பதைப் பார்க்கையில், என்னிடம் ஏதோ சமாசாரம் இருக்கிறது என்று என்னால் உணர முடிகிறது. இந்த நிலைக்கு எப்படி வந்தேன் என்று யோசிக்கிறேன். ஓர் எழுத்தாளனாவதற்கு தன் கதைகள் இல்லாமல், பிறர் கதைகளைப் படிக்க வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்தே உணர்ந்து கொண்டேன். சிறீரங்கத்தில் கோயில் சார்ந்த, பிரபந்தம் சார்ந்த தமிழ் சூழ்நிலையில் வளர்ந்ததும், பள்ளியில் தமிழ் படித்ததும் நான் எழுத்தாளனானதற்கு முக்கிய காரணங்கள். இதனால் மட்டும் ஒருவன் நல்ல எழுத்தாளனாகிவிடுவான் என்று சொல்ல முடியாது. சில எழுத்துக்களைப் படிக்கும்போது இம்மாதிரி நாம் எழுதமாட்டோமா என்று ஆதங்கமும், பொறாமையும் ஏற்பட்டது. இப்போது நான் பொறாமைப்படும் எழுத்தாளர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிட்டது.

எழுத்தாளனுக்கு படிப்பது மிக மிக முக்கியம். நான் மற்றவர் கதைகளைப் படிப்பதே இல்லை என்று சில எழுத்தாளர்கள் பெருமையாகச் சொல்லிக்கொள்ளும்போது, எனக்கு அவர்கள் மேல் பரிதாபமும், எரிச்சலும்தான் ஏற்படுகிறது. தினமும் நிறையப் படிப்பதுடன், நிறைய எழுதவும் வேண்டும். நான் படுக்கப் போகுமுன் ஐந்து பக்கமாவது படிப்பேன். அதுபோல் தினம் இருநூறு வார்த்தைகளாவது எழுதுவேன். இப்படி இதுவரை எழுதிய புத்தகங்களை எண்ணிப் பார்க்கையில், மலைப்பாக உள்ளது.

நிறைய எழுதுவதும், குறைவாக எழுதுவதும் அவரவரைப் பொறுத்தது. வெற்றிக்கு இரு தரப்பிலும் உதாரணங்கள் உள்ளன. குறைவோ, நிறைவோ. நல்ல கலைஞனுக்கு சில பொது குணாம்சங்கள் தேவை. முதலில் மற்றவர் கதையைப் படிப்பது, எழுதுவது மட்டுமின்றி, தமிழை ஒழுங்காகத் தெரிந்து கொள்வது, வார்த்தைகளின் வீச்சை அறிந்து கொள்வது, வார்த்தைகளைக் கருவிகள் போலக் கவலையுடன் பயன்படுத்துவது, உதாரணம், கவலை என்கிற சொல், விசாரம், மன சஞ்சலம் என்ற அர்த்தத்தில்தான் சாதாரணமாகப் பயன்படுத்துகிறோம். நினைவு அலைவதையும், கவலை என கவலைகொள் நெஞ்சினன் என்று கலித் தொகையில் ஒரு பிரயோகம் உண்டு. அக்கறை என்றும் அர்த்தம் உள்ளது. பயம் என்று ஒரு அர்த்தம் உண்டு. இப்படி எத்தனை 'கவலைகள்'. வார்த்தைகளின் பயன்பாட்டை அறியும்போது, அவைகளின் சக்தி புரியும். இப்படிப் பல விஷயங்கள் நல்ல கதைகளைப் படிப்பதால் எனக்கு ஏற்பட்டன.

அடுத்த பக்கத்தில் தொடரும்

இறுதியாக கவிஞர் மனுஷ்யபுத்திரன். தன் குறையையும், இயற்பெயரையும் எந்தவிதமான சலுகைக்கும் பயன்படுத்தாது, எங்கள் எல்லோரையும்விட தீர்க்கமாக நிமிர்ந்து நடக்கக்கூடியவர் மனுஷ்யபுத்திரன். இவரது 'என் படுக்கையறையில் யாரோ ஒளிந்திருக்கிறார்கள்', 'நீராலானது' போன்ற தொகுப்புகள், தமிழில் நவ கவிதையின் போக்கை நிர்ணயிப்பன. இந்த விழாவை ஒருவராக இருந்து, பற்பல வேலைகளை கவனித்துச் சிறப்பாக நடத்திய பாங்கிலிருந்தே, இவரது திறமை புரியும்.

**(சென்னையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் எழுத்தாளர் சுஜாதா உரையிலிருந்து தெரிந்தெடுத்த பகுதிகள். நன்றி: குமுதம் 2003).**

1. சுய உலா என்பதன் பொருள்:

    (a) எழுத்தாளர்கள் ஒன்றாகச் சேர்ந்து செல்லுதல்.
    (b) புத்தகவெளியீடு தொடங்கும் முன்பு நடக்கும் உலா.
    (c) எழுத்தாளன் தான் கடந்துவந்த பாதையை நோக்குதல்.
    (d) இவை எல்லாமே.

2. ஒரு மாலையைச் செலவழிப்பதில் மகிழ்ச்சியே என்பதில் மாலை என்ற சொல் குறிப்பது:

    (a) பொழுது
    (b) பரிசு
    (c) பணம்
    (d) நூல்

3. பின்வருவனவற்றில் சரியான கூற்று எது?

    (a) எழுத்தாளன் காசுக்காக எழுதக்கூடாது.
    (b) பிரபலமாவது மகாபாவம்.
    (c) எழுத்தாளனாக ஒருவர் பிறந்து வரவேண்டும்.
    (d) இவை எல்லாமே.

4. பின்வருவனவற்றில் தவறான கூற்று எது?

    (a) சமூகத்தை மாற்றவேண்டும் என எழுதுபவர் ஒரு வகையினர்.
    (b) எழுத்தால் புரட்சி ஏற்படவேண்டும் என எழுதுபவர் ஒரு வகையினர்.
    (c) பிரபலமானவர்கள் தரமான எழுத்தாளர்களாக இருக்கமுடியாது என்பது சிலர் கருத்து.
    (d) எல்லா எழுத்தாளர்களுமே காசுக்காக எழுதுபவர்கள் தான்.

அடுத்த பக்கத்தில் தொடரும்

5. “ஒவ்வொரு தலைமுறையிலும் எனக்குப் புது வாசகர்கள் கிடைப்பதைப் பார்க்கையில், என்னிடம் ஏதோ சமாசாரம் இருக்கிறது என்று என்னால் உணர முடிகிறது”, என சுஜாதா கூறுவதன் பொருள்.

(a) அவர் தலைமுறை தாண்டிய எழுத்தாளர்.

(b) அவர் எழுத்துகளைப் படிப்பவர்கள் எல்லாத் தலைமுறையிலும் உள்ளனர்.

(c) அவர் எழுத்து தரமாகவும் படிப்போரைக் கவர்வதாகவும் இருக்கின்றது.

(d) இவை எல்லாமே சரியானவை.

6. சுஜாதா புதிய எழுத்தாளர்களுக்குச் சொல்லும் முக்கிய செய்தி:

(a) உங்கள் எழுத்துக்களை மீண்டும் மீண்டும் படியுங்கள்.

(b) மற்றைய எழுத்தாளர்களின் படைப்புக்களைப் படியுங்கள்.

(c) எதனைப் பற்றியும் கவலைப்படாமல் எழுதுங்கள்.

(d) இவை எல்லாமே தவறானவை.

7. பின்வரும் கூற்றுக்களை வாசியுங்கள்.

(1) சுஜாதாவின் வெற்றிக்குக் காரணம் அவருக்கு நல்ல தமிழறிவு இருந்தது.
(2) சுஜாதாவுக்கு வாசிப்புப் பழக்கம் சிறுவயதில் இருந்தே தொடங்கியது.
(3) ஸ்ரீரங்கத்தில் கோயில் சூழலில் இருந்தோர்கள் நல்ல எழுத்தாளர்களாக இருந்தனர்.
(4) வாசிப்பு அனுபவம் இருப்பவர்கள் எல்லாம் நல்ல எழுத்தாளர்களாவார்கள்.
(5) தமிழ் அறிவும் வாசிப்பு அனுபவமும் இருந்தால் மட்டும் நல்ல எழுத்தாளானாக முடியாது.

இவற்றில் சரியான கூற்றுகள்:

(a) (1), (3), (5)

(b) (2), (4), (5)

(c) (1), (2), (5)

(d) (2), (3), (4)

8. நல்ல கலைஞனுக்குத் தேவையான பொது குணாம்சங்கள் என சுஜாதா வலியுறுத்துவது:

(a) தமிழை ஒழுங்காகத் தெரிந்துகொள்வதும், வார்த்தைகளின் வீச்சை அறிந்துகொள்வதும்.

(b) வார்த்தைகளைக் கருவிகள் போல அக்கறையுடன் பயன்படுத்துதல்.

(c) கவலை என்ற சொல்லின் பல பொருளைத் தெரிந்து பயன்படுத்துதல்.

(d) இவை எதுவும் அல்ல.

அடுத்த பக்கத்தில் தொடரும்

9. சுஜாதா அவர்கள் பேசிய புத்தகவெளியீட்டு விழாவை நடாத்திய மனுஷ்ய புத்திரன் பற்றிய தவறான கூற்று.

(a) அவர் தன் குறையை எந்தவித சலுகைக்கும் பயன்படுத்தாதவர்.
(b) தற்காலக் கவிதைப் போக்கை நேறிப்படுத்தும் வல்லமை மிக்கவர்.
(c) மனுஷ்ய புத்திரன் என்பது அவர் இயற்பெயர்.
(d) அவர் ஒரு பிரபலமான கவிஞர்.

10. இவ்வுரையில் சுஜாதா சொன்னது:

(a) தனது சொந்த அனுபவம் பற்றியும், வெற்றிபெறும் எழுத்தாளனுக்கு என்ன தேவை என்பது பற்றியும்.
(b) எப்படி ஒருவர் எழுத்தை விமர்சிக்கவேண்டும் என்பது பற்றி.
(c) தனது சிறுவயதுக் காலத்தைப் பற்றி.
(d) புத்தக வெளியீடு பற்றி.

**வினாக்கள்: 11-15: பின்வரும் நூல்களுக்குப் பொருத்தமான ஆசிரியரைத் தெரிவு செய்க.**

| |
|---|
| (a) பாடுமீன் சிறீகந்தராசா |
| (b) கோகிலா மகேந்திரன் |
| (c) வைரமுத்து |
| (d) கண்ணதாசன் |

11. உள்ளத்துள் உறைதல் – உளவியல் நூல்
12. கள்ளிக்காட்டு இதிகாசம்
13. சங்ககாலங்களும் சங்க இலக்கியங்களும்
14. அர்த்தமுள்ள இந்துமதம்
15. தண்ணீர்த் தேசம்

**வினாக்கள்: 16-20: வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16. இவ்வருடம் அவுஸ்திரேலியத் தமிழ் எழுத்தாளர் விழா நடைபெற்ற இடம் எது?

(a) சிட்னி
(b) மெல்பேர்ன்
(c) கன்பரா
(d) பிரிஸ்பேன்.

அடுத்த பக்கத்தில் தொடரும்

17. தமிழ்முரசு அவுஸ்திரேலியா என்பது சிட்னியில் இருந்து பிரசுரமாகிறது.

(a) இது ஓர் இணைய சஞ்சிகை.
(b) இது அச்சில் வெளிவரும் வார சஞ்சிகை.
(c) இது ஒருவரின் சொந்த வலைப்பதிவு.
(d) இது ஒரு மாதாந்த சஞ்சிகை.

18. அவுஸ்திரேலிய தமிழ் சஞ்சிகைகள் தொடர்பான சரியான கூற்று.

(a) கலப்பை இதழ் மாதம் தோறும் வெளிவருகிறது.
(b) மெல்லினம், தென்றல், தமிழோசை என்பன தற்போது வெளிவருகின்றன.
(c) கலப்பை இதழை சிட்னி தமிழ் அறிவகம் வெளியிடுகிறது.
(d) மெல்லினம் மெல்பேர்னிலிருந்து வெளிவருகிறது.

19. சிட்னியில் வதியும் தமிழகத்தைத் சேர்ந்த மூத்த கவிஞர்:

(a) கவிஞர் அம்பி
(b) கவிஞர் நா மகேசன்
(c) கவிஞர் வைத்தீஸ்வரன்
(d) இவர்களில் எவருமில்லை.

20. அண்மையில் சிட்னிக்கு வருகை தந்த ஈழத்துத் தமிழ் அறிஞர்:

(a) செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன்
(b) கவிச்செல்வர் ஆறுமுகம்
(c) கலைமாமணி பா விஜய்
(d) கவியரசு வைரமுத்து

## வினாக்கள்: 21-25 பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(a) எஸ். பொன்னுத்துரை
(b) ஆ.சி. கந்தராஜா
(c) செ. பாஸ்கரன்
(d) லெ. முருகபூபதி

21. சிட்னியில் வதியும் கவிஞரும் இணய இதழாசிரியரும்.
22. கனடாவில் 'இயல்' விருது பெற்ற அவுஸ்திரேலிய மூத்த எழுத்தாளர்.
23. ஒலிபரப்பாளரும் சிறுகதை ஆசிரியரும்.
24. அவுஸ்திரேலிய தமிழ் எழுத்தாளர்களை ஒன்றிணைத்து கலை இலக்கியச் சங்கத்தை நிறுவியவர்.
25. தமிழ் எழுத்தாளர் விழாவை அவுஸ்திரேலியாவில் ஆரம்பித்துவைத்தவர்.

அடுத்த பக்கத்தில் தொடரும்

**வினாக்கள்: 26-30 பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான பதிலைத் தெரிவு செய்க.**

26. சேர சோழ பாண்டிய அரசுகளை முறைப்படி காட்டும் சின்னங்கள்:

(a) புலி, மீன், வில்
(b) மீன், வில், புலி
(c) வில், புலி, மீன்
(d) புலி, வில், மீன்.

27. ஐவகை நிலங்களுள் வயலும் வயல் சார்ந்த நிலமும்:

(a) குறிஞ்சி
(b) முல்லை
(c) மருதம்
(d) பாலை

28. தற்போதும் அச்சுவடிவில் உள்ள காலத்தால் முந்திய இலக்கண நூல்.

(a) இலக்கண விளக்கம்
(b) அகத்தியம்
(c) நன்னூல்
(d) தொல்காப்பியம்

29. கங்கை கொண்ட சோழபுரத்தைக் கட்டிய அரசன்:

(a) இராஜ இராஜ சோழன்
(b) இராஜேந்திர சோழன்
(c) கரிகாலன்
(d) எல்லாளன்

30. யாதும் ஊரே யாவரும் கேளிர் எனத்தொடங்கும் பாடல் இடம்பெற்ற நூல்.

(a) சிலப்பதிகாரம்
(b) இராமாயணம்
(c) மகாபாரதம்
(d) புறநானூறு

அடுத்த பக்கத்தில் தொடரும்

**வினாக்கள்: 31-35: பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. எந்தச் சொல்லில் வரும் **க** என்ற எழுத்து ஆங்கிலத்தில் **H** என்ற எழுத்தின் ஒலியைக் கொண்டிருக்கிறது?

(a) அங்கம்

(b) அக்கம்

(c) காகம்

(d) பக்கம்

32. எந்தச் சொல்லில் வரும் **ஐ** என்ற எழுத்தின் ஒலி **அ** என்ற எழுத்தின் ஒலியைக் கொண்டிருக்கிறது?

(a) தலைவர் அவர்களே

(b) ஐயா

(c) பையா

(d) தைத்திருநாள்

33. பின்வருவனவற்றில் மரியாதைப் பன்மையைக் கொண்ட வாக்கியம் எது?

(a) அப்பா, இங்கே வாருங்கள்.

(b) சபையோர்களே, உங்கள் ஆதரவிற்கு நன்றிகள்.

(c) மேன்மை தங்கிய நடுவர்களே.

(d) மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய ஆசிரியர்களே.

34. பெண்களும், குழந்தைகளும் உயிரைத் துச்சமென மதித்துப் படகில் ஏறிக் கடற்பயணம் செய்து அவுஸ்திரேலியா வருகின்றனர். இங்கு துச்சம் என்பது:

(a) உச்சம்

(b) அச்சம்

(c) அற்பம்

(d) சொச்சம்

35. ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி இசை கொண்டு வாழியவே என்ற அடியில் உள்ள இசை என்ற சொல் குறிப்பது:

(a) தமிழ் இசையை

(b) வாத்திய இசையை

(c) யாழ் இசையை

(d) புகழை

அடுத்த பக்கத்தில் தொடரும்

**வினாக்கள்: 36-40: பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

36. பல்கலைக்கழகத் துணைவேந்தரைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்:

(a) Registrar
(b) Vice Chancellor
(c) Dean of the Faculty
(d) Head of the Department

37. ஜுலை 2012 இலிருந்து காபன் வரி நடைமுறைக்கு வருகிறது.
இங்கு காபன் வரி என்பது:

(a) Income Tax
(b) Import Tax
(c) Export Tax
(d) Carbon Tax

38. எலிசபெத் மகாராணியார் அரியணையில் ஏறிய அறுபது ஆண்டுகளைக் குறிக்கும் Diamond Jubiliee கொண்டாட்டங்கள் இலண்டனில் நடைபெற்றன. இங்கு Diamond Jubilee என்பதற்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்:

(a) பொன்விழா
(b) வைரவிழா
(c) வெள்ளிவிழா
(d) நூற்றாண்டு விழா

39. யாவராலும் தொகுக்கப்படக் கூடிய ஒரு கட்டற்ற தமிழ்க் கலைக்களஞ்சியம்:

(a) தமிழ் விக்கிபீடியா
(b) என்சைகிளொபீடியா
(c) கிரியா தமிழ் அகராதி
(d) இவை எல்லாமே.

40. இளையோர்கள் Face book இல் அதிகநேரம் செலவிடுகிறார்கள். இங்கு Face book என்பது:

(a) உங்கள் முகம் காட்டும் மடிக்கணினி
(b) பிறர் முகம் காட்டும் கணினி
(c) முக நூல் எனும் சமூக ஊடகம்
(d) மின் நூலகம்

அடுத்த பக்கத்தில் தொடரும்

**வினாக்கள்: 41-50: பின்வரும் உரைப்பகுதில் கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லை ஊகித்து, விடைத்தாளில் குறிப்பிட்ட இலக்கத்துக்கு எதிரே எழுதுக.**

## "உருவாகிறது சிறந்த தலைமுறை!"

சென்னை புத்தகக் காட்சி என்றாலே வாசகர்களுக்கு மட்டுமல்ல, எழுத்தாளனுக்கும் கொண்டாட்ட மனநிலைதான். தன்னுடைய எழுத்துக்களுக்கான (41)____________________ நேரடியாக சந்தித்து உரையாடும் அனுபவம் இதுபோன்ற சந்தர்ப்பங்களில்தான் எழுத்தாளர்களுக்கு கிட்டுகிறது. வாசகனும் தனக்கு ஆதர்சனமான படைப்பளிகளை கண்டு பேசி அனுபவங்களை பகிர்ந்துகொள்வதும் இந்த (42)___________________________________ தான்.

சென்னை புத்தகக் காட்சி அப்படியான கொண்டாட்டத்தை கொடுப்பதால் பெரும்பாலான படைப்பாளிகள் ஒவ்வோர் ஆண்டும் இந்த பத்து நாட்களை (43)_________________________ என்றுதான் சொல்ல வேண்டும்.

நவீன இலக்கியங்களை, அரசியலை படிக்கத் தொடங்கியிருக்கும் சமூக (44)____________________________________________________ கொண்ட இளைய தலைமுறை உருவாகியிருக்கிறது. சென்னை புத்தகக் காட்சியின் மூலம் இந்த மாற்றங்களை நேரடியாகக் காணமுடிகிறது. முன்பெல்லாம் சமையல், ஜோதிடம், ஆன்மிகம், சுயமுன்னேற்றம், பத்து நாளில் கோடீஸ்வரன் ஆவது எப்படி என்பது மாதிரியான புத்தகங்கள் (45)______________________________ என்றால் இப்போது சமூக இலக்கியங்கள், சுற்றுச்சூழல், அரசியல் புத்தகங்கள் என்பவற்றின் விற்பனை மிகவும் அதிகரித்திருப்பதாக பெருமையாகச் சொல்கிறார்கள் பதிப்பாளர் நண்பர்கள்.

பல இளைஞர்களின் கைகளில் இருந்த புத்தகங்களை பார்க்கும்போது மனசுக்கும் சந்தோசமாகவே இருந்தது. சிறு சிறு வெளியீடுகளாக வந்த புத்தகங்களை தொகுத்து கைக்கு அடங்காத தடிமனான புத்தகங்களாக கொண்டுவந்தாலும் வாங்கத்தான் செய்கிறார்கள். நமது பதிப்பாளர்களும் பதிப்பில் கிடைக்காத பல நூல்களையும் தேடிப்பிடித்து (46)__________________________ இதன் மூலம் நமது வரலாறு பண்பாடு சார்ந்த நூல்களும் வெளிவந்துள்ளன.

இந்த விஷயத்தில் குறிப்பாக கல்கியின் பொன்னியின் செல்வன் புதிய பாய்ச்சலையே (47)___________________________________________________ பல பதிப்பாளர்களும் சிறப்பான முறையில் வெளியிட்டிருக்கிறார்கள். அதே போல வாசகத்தளம் முன்னைவிடவும் விரிவடைந்திருக்கிறது. எஸ்.ராமகிருஷ்ணன், ஜெயமோகன், கு.ப.ரா, கு.அழகிரிசாமி, புதுமைப்பித்தன், ஜெயகாந்தன் என நமது படைப்பாளிகள் மட்டுமல்ல... மார்க்ஸிம் கார்க்கி, தாஸ்தாவஸ்கி என ருஷ்ய படைப்பாளிகளின் (48)______________________________________ பல வாசகர்கள் ஆர்வத்துடன் வாங்கிக்கொண்டிருந்ததை பார்க்க முடிந்தது.

அடுத்த பக்கத்தில் தொடரும்

பல கடைகளிலும் இளைஞர்களின் கூட்டம்தான். குறிப்பாக கணினி சார்ந்த துறைகளில் பணிபுரியும் இளைஞர்கள் இப்போது தீவிர இலக்கிய வாசிப்பு அனுபவங்கள் நோக்கி வருவதாக இந்த வருட புத்தக கண்காட்சி உணர்த்துகிறது. நூல்களை தெரிவு செய்து வாங்கும் (49)________________________________ அதிகரித்துள்ளது. இப்படியான ஆரோக்கிய தலைமுறையை தேடித்தான் ஒவ்வொரு படைப்பாளியும் தனது படைப்புகளை சமூகத்துக்கு கொண்டு செல்கிறான். இந்த வருட (50)__________________________ இது போன்ற பல காட்சிகளையும் அனுபவங்களளையும் அள்ளிக் கொடுத்தது என்றே சொல்லலாம்.

## வினாக்கள்: 51-60 : ஆக்கத்திறன் வினா

அடுத்த சென்னைப் புத்தகக் கண்காட்சிக்கு சென்று வர நீரும் விரும்புகிறீர். உமது விருப்பத்தை உமது தமிழ்ப் பாடசாலை நண்பர்களுக்குத் தெரிவித்து அவர்களையும் கண்காட்சிக்கு செல்லத் தூண்டும் வண்ணம் பாடசாலை சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக ஒரு கடிதம் வரைக. கடிதம் உமது சொந்த மொழியில் 150 சொற்களில் அமைந்திருத்தல் வேண்டும்.